**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வேப்பந்தட்டை**

முன்னிலை: திரு.இ. தெய்வீகன், பி.ஏ.எல்.எல்.பி.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
வேப்பந்தட்டை.

2026–ம் ஆண்டு ஜீன் மாதம் 19–ம் நாள் வெள்ளிக்கிழமை

**ஆண்டுபட்டிகை வழக்கு எண்.70/2026**

CNR NO. TNPB06-000563-2026

அரசுக்காக
உதவி காவல் ஆய்வாளர்,
வி. களத்தூர் காவல் நிலையம்,
குற்றஎண். 23/2026 .... குற்ற முறையீட்டாளர்

/எதிர்/

ரோஸி, வயது 48/2025
க/பெ. முருகேசன்,
தெற்கு தெரு, பாண்டகபாடி,
வேப்பந்தட்டை வட்டம், பெரம்பலூர் மாவட்டம். .... எதிரி

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் 07.04.2021 ம் தேதியிட்ட R.O.C.No.814/2020/ RG /F1 ன் படி இவ்வழக்கில் கீழ்க்கண்ட விவரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.)

| வரிசை எண் | பொருள் | விவரம் | | |
|---|---|---|---|---|
| 1. | குற்றம்சாட்டப்பட்டவர்/ எதிரி நீதிமன்ற காவலில் வைக்கப்பட்ட காலம் | (எதிரி நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தப்பட்டுத்தப்படவில்லை) | | |
| | | குற்றவாளி காவலில் வைக்கப்பட்ட தேதி | விடுவிக்கப்பட்ட விவரம் & தேதி | |
| | | 05.02.2026 | 05.02.2026 (SB) | |
| 2. | நீதிமன்றத்தில் புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி | 18.06.2026 | | |
| 3. | அமர்வு நீதிமன்றத்திற்கு வழக்கினை சமர்ப்பித்த தேதி | இல்லை | | |
| 4. | BNSS பிரிவு 230 இன் கீழ் குற்றம் | 230 of BNSS on நாள்: 18.06.2026 | | |



DEIVEEGAN E
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by DEIVEEGAN E
Location: VEPPANTHATTAI

| | | | | |
|---|---|---|---|---|
| | சாட்டப்பட்டவரிடம்/எதிரியிடம் விசாரிக்கப்பட்ட தேதி | | | |
| 5. | இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட அனைத்து மனுக்களின் (BNSS 355–ன் கீழான மனு தவிர) மீதான உத்தரவு விபரம்(இந்நீதிமன்றத்தில் உத்தரவுக்கு எதிரான மேல்முறையீட்டில் மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய உத்தரவு உட்பட) | இல்லை | | |
| 6 | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட தேதி | சாட்சிகள் | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | அ.சா.1<br>அ.சா.2 | 19.06.2026<br>19.06.2026 | 19.06.2026<br>19.06.2026 |
| 7 | எதிரியிடம் 351(1)(b) of BNSS 2023 கீழ் வினா வினவப்பட்ட தேதி | 19.06.2026 | | |
| 8. | எதிரி தலைமறைவு குறித்த விபரம் மற்றும் எதிரி ஆஜர்படுத்தப்பட்ட/தோன்றிய விபரம் | தலைமறைவு ஏதும் இல்லை | | |
| 9. | இவ்வழக்கில் மேலமை நீதிமன்றம் பிறப்பித்த தடை உத்தரவு ஏதேனும் இருப்பின் அது குறித்த விவரம் | தடை உத்தரவு ஏதும் இல்லை | | |

இவ்வழக்கானது 01.06.2026–ம் தேதியன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு, இது நாள் வரை விசாரணையில் இருந்து வந்து கடந்த 19.06.2026–ம் தேதியன்று என் முன்பாக இறுதியாக விசாரணைக்கு வந்தபோது அரசுத் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றவியல்



DEIVEEGAN E
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by DEIVEEGAN E
Location: VEPPANTHATTAI

உதவி வழக்கறிஞர் நிலை–I, திரு. T. சுரேஷ் அவர்களும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. P. காமராசு அவர்களும் முன்னிலையாகி எடுத்துரைத்த இருதரப்பு வாதங்களை கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

<u>தீர்ப்புரை</u>

<u>2) அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:</u>

வி. களத்தூர் காவல் நிலைய சரகத்திற்கு உட்பட்ட கிராமத்தில் கடந்த 05.02.2026 ம் தேதி காலை சுமார் 11.00 மணிக்கு எதிரி பாண்டகபாடியில் உள்ள அவரது வீட்டின் பின்புறம் வைத்து சுமார் 180ML அளவுடன் கூடிய Seamens பிராந்தி என்ற லேபிள் ஒட்டப்பட்டிருந்த 30 பாட்டில்களை அரசு அனுமதியின்றி சட்டத்திற்கு புறம்பாக அதிக லாபத்திற்கு விற்பனைக்காக வைத்துள்ளார். எனவே எதிரியின் செய்கையானது சட்ட பிரிவு 4(1)(C) AMENDMEND TNP ACT 2024–ன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் ஆகும் எனவும் வி. களத்தூர் உதவி காவல் ஆய்வாளரால் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) எதிரிக்கு பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 230–ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்களை இலவசமாக வழங்கி எதிரிக்கு போதிய கால அவகாசம் கொடுத்து எதிரியின் மீதான 4(1)(C) AMENDMEND TNP ACT 2024–ன் கீழான குற்றச்சாட்டு வனைந்து குற்றம் குறித்து, வினவியபோது எதிரி குற்றைத்தை மறுத்து குற்றவாளி இல்லை எனவும் வழக்கு விசாரிக்கபட வேண்டும் என்று கோரியதால் வழக்கு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

4) அரசுத் தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.2 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்களும் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் சான்று பொருட்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5) அரசுத் தரப்பு சாட்சியங்களில் இருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம் :–

i) அ.சா.1 ராஜா தனது சாட்சியத்தில், வழக்கு சம்பவத்தை குறித்தும் வழக்கு சம்பவத்தின் போது எதிரியிடமிருந்து கைப்பற்றிய வழக்கு சொத்து குறித்தும் எதிரியை காரணம் கூறி கைது செய்தது குறித்தும், கைப்பற்றுதல் மற்றும் அழித்தல் மகஜர் தயார்



DEIVEEGAN E

DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by DEIVEEGAN E
Location: VEPPANTHATTAI

செய்தது குறித்தும் அதில் தான் கையொப்பம் செய்தது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

ii) அ.சா.2 புலனாய்வு அதிகாரி சுரேஷ்குமார் தனது சாட்சியத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தது பற்றியும், வழக்கை புலனாய்வு செய்தது குறித்தும், வழக்கு சொத்தை கைப்பற்றி நீதிமன்றத்தில் ஒப்படைத்து படிவம் 91 தயார் செய்தது குறித்தும் சாட்சியம் அளிக்கிறார்.

6) அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியத்திலிருந்து எதிரிக்கு பாதகமாக அமைந்துள்ள சாட்சியங்களையும், சூழ்நிலைகளையும் பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 351(1)(ஆ)–ன் கீழ் எதிரியிடம் விளக்கி வினவியபோது எதிரி அவற்றை மறுத்துரைத்துள்ளார். மேலும் எதிரி தனது தரப்பில் சாட்சிகள் இல்லை என்று தெரிவித்தார். எதிரி தரப்பில் எவ்வித சாட்சியும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் மற்றும் சான்றுப்பொருட்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

7) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது, அரசுத்தரப்பு வழக்கறிஞர் அவர்களால் அ.சா.1 முதல் அ.சா.2 ஆகிய சாட்சிகள் மூலமும், அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.4 வரையிலான சான்றாவணங்கள் மூலமும் எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே சாட்சியங்களின் அடிப்படையில் எதிரியின் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டுள்ளது என்றும் வாதிட்டார்.

8) இதனை மறுத்து எதிரி தரப்பில் ஆஜரான வழக்கறிஞர், எதிரி மீதான குற்றச்சாட்டுகள் அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்றும், சாட்சிகளும் எதிரிக்கு எதிரான குற்றச்சாட்டை நிரூபிக்கும் வகையில் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், எனவே சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்து உத்தரவிட வேண்டும் என்று வாதிட்டார். இவ்வழக்கில் முன்னிறுத்தப்பட்டுள்ள வாய்மொழி மற்றும் ஆவண சாட்சியங்கள் இந்நீதிமன்றத்தால் கவனமாக பரிசீலிக்கப்பட்டது.

9) இவ்வழக்கின் தீர்வுக்குரிய பிரச்சனை யாதெனில் எதிரியின் செய்கையானது 4(1)(C) AMENDMEND TNP ACT 2024–ன் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகளை அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.

DEIVEEGAN E
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by DEIVEEGAN E
Location: VEPPANTHATTAI

10) தீர்வு

i) அரசு தரப்பு வழக்கு யாதெனில் எதிரி பாண்டகபாடியில் உள்ள அவரது வீட்டின் பின்புறம் வைத்து சுமார் 180ML அளவுடன் கூடிய Seamens பிராந்தி என்ற லேபிள் ஒட்டப்பட்டிருந்த 30 பாட்டில்களை மது பாட்டில்களை அரசு அனுமதியின்றி சட்டத்திற்கு புறம்பாக வைத்திருந்தார் என்பது வழக்காகும்.

ii) எதிரி தரப்பில் எதிரி குற்றம் அற்றவர் என்றும், எந்த ஒரு சூழ்நிலையிலும் தவறும் செய்யவில்லை என்றும், அவர்கள் நிரபராதி என்றும், அவர்கள் மீது எந்த ஒரு குற்றமும் எழவில்லை என்றும், அவர்கள் மீதான குற்றத்திற்கு அரசு தரப்பில் போதுமான சாட்சியங்கள் மூலம் நிரூபணம் செய்ய தவறிவிட்டதாக வாதிட்டு எதிரியை விடுதலை செய்ய வேண்டுமென்று எதிரி தரப்பு வழக்கறிஞர் வாதுரை செய்தார்.

iii) இந்த வழக்கு எதிரியிடமிருந்து சுமார் 30 மதுபாட்டில்கள் கைப்பற்றப்பட்டு அதற்காக அவரை கைது செய்து பின்னர் விசாரணை நடத்தி இறுதி விசாரணை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதிலிருந்து இவ்வழக்கு தொடங்குகிறது. எதிரி இந்த வழக்கில் ஆஜரான பின்பு அவருக்கு வழக்கு குறித்த ஆவணங்களை கொடுத்து சட்டப்படி விசாரணை நடத்தி இறுதி விசாரணை முடிவுற்றுள்ளது.

iv) இந்நிலையில் இந்த வழக்கு அ.சா.1 மற்றும் அ.சா.2 ஆகிய இரண்டு பேரும் காவல்துறையை சேர்ந்தவர்கள் அவர்கள் இருவரும் எதிரியை புலனாய்வு செய்து கைது செய்த நேரத்தில் உடன் இருந்தவர்களும் காவல் துறையை சேர்ந்தவர்களே ஆவர். கைது செய்யப்பட்டதாக சொல்லப்படும் இடம் பொது இடம் ஆகும். அவ்வாறு இருக்க தனிநபர் யாரையும் விசாரித்து எதிரிடமிருந்து தான் வழக்கு சொத்து கைப்பற்றப்பட்டது என்பதை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு அரசு தரப்பில் நிரூபிக்கப்படவில்லை. பட்டியல் சாட்சிகள் அனைவரும் காவல்துறையினர் என்பதால் அவர்களுக்கு தகுந்தாற்போல் புள்ளி விவர கணக்கிற்காக வழக்கு பதியப்பட்டு இருக்கலாம் என்ற சந்தேகம் இந்நீதிமன்றத்திற்கு எழுகிறது.

v) மேலும் எதிரியிடமிருந்து வழக்கு சொத்தை கைப்பற்றப்பட்டதாக சொல்லப்படும் நேரம் இடம் அனைத்தையும் அரசு தரப்பில் நிரூபிக்க தவறவிட்டது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. ஒருவேளை எதிரிடமிருந்து கைப்பற்றப்பட்டதாக



DEIVEEGAN E
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by DEIVEEGAN E
Location: VEPPANTHATTAI

சொல்லப்படும் மது பாட்டில்கள் அவரிடமிருந்து கைப்பற்றப்பட்டு இருப்பின் எதிரியுடன் யாரும் இல்லை என்பதும் போலீசார் மட்டும் உடன் இருந்தார்கள் என்பதும் ஒரு சேர அனைத்து வழக்கிற்கும் பதியப்பட்டுள்ளதிலிருந்து புள்ளி விவர கணக்கிற்காக பதியப்பட்டுள்ளது என்ற எதிரி தரப்பில் வாதம் செய்வது நம்புவதற்கு உறுதியாகவே உள்ளது.

vi) எனவே அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வலுசேர்க்காத சங்கதிகளிலிருந்தும் ஆவணங்களிலிருந்தும் எதிரியை குற்றவாளி என முடிவு செய்ய எந்த அடிப்படை ஆதாரமும் இல்லை என கருதி எதிரியை இந்த வழக்கில் இருந்து விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. மேலும் இந்த வழக்கில் கைப்பற்றப்பட்டுள்ள வழக்கு சொத்தான RP No. 40/2026 மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னிட்டு அழிக்க இதன்மூலம் உத்தரவிடப்படுகிறது.

11) முடிவில் வழக்கின் எதிரியின் மீதான 4(1)(C) AMENDMEND TNP ACT 2024–ன் கீழான குற்றச்சாட்டுக்களை அரசுத் தரப்பில் தகுதிநிலை ஐய்யப்பாட்டிற்கு அப்பாற்பட்டு நிரூபணம் செய்யவில்லை என்றும், இந்நீதிமன்றம் முடிவு செய்து பாரதிய நாகரிக் சுரக்சா சன்ஹிதா பிரிவு 271(1)–ன் கீழ் எதிரியை மேற்கண்ட குற்றச்சாட்டிலிருந்து விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது. எதிரி எழுதிக் கொடுத்துள்ள பிணையப் பத்திரம் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பின் என்னால் படித்துப்பார்த்து, பிழைத் திருத்தம் செய்யப்பட்டு, இன்று 19.06.2026–ம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

DEIVEEGAN E
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by DEIVEEGAN E
Location: VEPPANTHATTAI

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.

**I. அரசுத் தரப்பு சாட்சிகள் :–**

1. அ.சா.1 – ராஜா
2. அ.சா.2 – சுரேஷ்குமார்

**II. அரசுத் தரப்பு சான்றாவணங்கள் :–**

1. அ.சா.ஆ.1 – கைப்பற்றுதல் மகஜர்
2. அ.சா.ஆ.2 – அழித்தல் மகஜர்
3. அ.சா.ஆ.3 – முதல் தகவல் அறிக்கை
4. அ.சா.ஆ.4 – படிவம் 91

**III. அரசுத் தரப்பு சான்று பொருள் :–**

இல்லை

**IV. எதிரி தரப்பு சாட்சி, சான்றாவணம், சான்று பொருள் :–**

இல்லை

DEIVEEGAN E
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by DEIVEEGAN E
Location: VEPPANTHATTAI

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.

குறிப்பு

1. வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தனர்.
2. எந்த சாட்சியும் 3 வாய்தாவுக்கு மேல் விசாரிக்கப்படாமல் நிறுத்தி வைக்கப்படவில்லை.
3. வழக்கின் முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

DEIVEEGAN E
DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
Digitally signed by DEIVEEGAN E
Location: VEPPANTHATTAI

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வேப்பந்தட்டை.